# வருடாந்த அறிக்கை

# 2012



வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி.

## தூர நோக்கு

“கமநலத்திற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும்

தாமதமின்றி உற்பத்தி செய்து விநியோகிப்பதில்

இலங்கை கமநலத் துறைக்கு சாதகமான முறையில் பங்களிப்பைச் செலுத்துவதன் மூலம்

அரசாங்கத் துறையில் உள்ள முன்மாதிரியான நிறுவனமாக செயற்படுதல்.”

## செயற்பணி

இலங்கையில் முன்னணி உர உற்பத்தியாளராகவும் விநியோகத்தராகவும் திகழ்ந்து

அரசாங்கத்தின் கமநலத்திற்கான தூர நோக்கில் பெருமைவாய்ந்த உரிமையாளராக

உற்பத்தியைப் பரவலாக்கி,

உயர் தரத்திலான உற்பத்தியை வெளிப்படுத்தி,

நிறுவகத் தரப்பினரின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் செயற்பட்டு

சுதந்திர நிறுவகமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல்


COLOMBO COMMERCIAL FERTILIZERS LTD
DISTRIBUTION NETWORK
Northern
Sippukulama
Kanthale
Pandulagama
Serunuwara
Negampaha
North Central
Galenbindunuwa
Jayanthipura
Kaduruwela
North Western
Nikaweratiya
Kurunegala
Eastern
Central
Kadugannawa
Akkareipattu
Badulla
HEAD OFFICE &
CENTRAL
WAREHOUSE
HUNUPITIYA
Western
Uva
Buttala
Sabaragamuwa
Suriyaara
Bataatha
Southern
Matara

# உள்ளடக்கம்


- நிறுவனத் தகவல் 1 - 2
- தலைவரின் மீளாய்வு 3 - 5
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 6 - 14
- ஐந்தொகை 15 -16
- வருமானக்கூற்று 17
- மூலதன மாற்றக் கூற்று 18
- காசுப்பாய்ச்சற் கூற்று 19 – 20
- கணக்கீட்டுக் கொள்கைகள் 21 – 28
- கணக்குகளின் குறிப்பு 29 - 44

# நிறுவனத் தகவல்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனி, ஆரம்பத்தில் பிரிட்டிஷ் கம்பனியொன்றாக இருந்து 1971 இன் 35 ஆம் இலக்க வியாபார முயற்சிகள் (கொள்ளல்) அதிகாரச்சட்டத்தின் கீழ் 1976 சனவரி 14 ஆம் திகதி அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டது. அன்று முதல் இக் கம்பனி அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனி என்னும் பெயருடன் இயங்கி வந்தது.

1990 ஆம் ஆண்டின் போது, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனியானது, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார முயற்சிகளை அரசாங்கக் கம்பனிகளாக மாற்றம் செய்யும் 1987 இன் 23 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், ஓர் அரச கம்பனியாக அமைக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாற்றத்தின் போதான மொத்த பங்கு மூலதனம் ரூபா 100,000,000 ஆன ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன 10,000,000 பங்குகளும் திறைசேரிச் செயலாளரின் முழு உடமையாக்கப்பட்டவையாகும்.

1994 ஆம் ஆண்டின் போது இக் கம்பனி அரசாங்கக் கொள்கையின் கீழ் தனியார் மயமாக்கப்பட்டதுடன் பங்குகளில் 90% ஆனவையும் 1994 யூலை மாதம் தனியார் முகாமைத்துவத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், பொதுத் திறைசேரிக்கும் தனியார் முகாமைத்துவத்திற்கும் இடையிலான ஒப்பந்த மீறலின் காரணமாகவும் அதனை அடுத்து கம்பனியில் காணப்பட்ட ஊழியர் குழப்பம் காரணமாகவும் 1996 இன் 29 ஆம் இலக்க அரச முயற்சிகளின் புனர் நிர்மாண அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1997 சனவரி 20 ஆம் திகதி மீண்டும் அரசாங்கத்திற்கு மீள்உரித்தாக்கப்பட்டது. அன்று முதல் கடந்த 13 ஆண்டுகாலமாக இக் கம்பனி உரிய அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் திறைசேரியினால் உடமையாக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ➢ கம்பனியின் பெயர் | - | வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி |
| ➢ பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | - | 55/75 தலுபிட்டிய வீதி, ஹுணுப்பிட்டிய, வத்தளை. |
| ➢ தலைவர் | - | என்.எஸ்.எம். சம்சுதீன் |
| ➢ தலைமை அலுவலகம் மற்றும் தொழிற்சாலை பண்டகசாலைக் கட்டடத் தொகுதி | - | தலுபிட்டிய வீதி, ஹுணுப்பிட்டிய, வத்தளை. |
| ➢ கூட்டிணைக்கப்பட்ட திகதி | - | 1989 ஒக்தோபர் 04 |
| ➢ கணக்காய்வாளர்கள் | - | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| ➢ வங்கியாளர்கள் | 1. | மக்கள் வங்கி – தொகுதிக் கிளை கொழும்பு 10 |
| | 2. | மக்கள் வங்கி – வத்தளை |
| | 3. | இலங்கை வங்கி – வத்தளை |

# தலைவரின் மீளாய்வு



இலங்கை வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1872 ஆம் ஆண்டில் பெரிய பிரித்தானியாவில் ஸ்தாபிக்கப்பட்ட பிரித்தானிய குடியரசிற்கு உரித்தான கம்பனியாக இயங்கியது. அன்று முதல் 1976 வரை நூற்றாண்டிற்கும் மேலான காலமாக இக் கம்பனியின் முகாமைத்துவமும் நிர்வாகமும் லண்டனில் இருந்து பிரித்தானியர்களால் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் ஒருங்கிணைப்புடன் இக் கம்பனி 1971 இன் 35 ஆம் இலக்க வியாபார நிறுவக உடமையாக்கல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1976 இல் மக்கள் மயமாக்கப்பட்ட ''அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் (உரங்கள்) கம்பனி'' யாக தனது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட திறமையான அதிகாரியின் கீழ் முகாமைத்துவம் செய்யப்பட்டு நிர்வகிக்கப்பட்டன.

1999 இல் இவ் அரச வியாபாரம் ''வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி'' எனும் பெயரில் ரூபா 100 மில்லியன் அனுமதிக்கப்பட்ட கொடுத்துத் தீர்க்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும் அம் முழுப் பங்குகளின் உரித்தும் பொதுத் திறைசேரிச் செயலாளரின் பெயரில் 1987 இன் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபன அல்லது அரசுடமையாக்கப்பட்ட வியாபார நிறுவகம் பொதுக் கம்பனியாக்கப்படும் அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரமே உரித்தாக்கப்பட்டது.

அப்போதைய அரசாங்கத்தின் '' திறந்த பொருளாதாரக் கொள்கை'' யின் கீழ் ஏனைய அனேகமான அரச கம்பனிகளைப் போன்று இந் நிறுவனமும் தனியார் மயமாக்கப்பட்டது. இதன் பிரகாரம் 1994 இன் போது வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் பங்குகளில் 90% ஆனவை தனியார் பிரிவிடம் கையளிக்கப்பட்டது. மிகுதிப் பங்குகளில் 10% ஆனவை ஊழியர்களுக்கிடையே பகிரப்படுவதற்காக வைத்துக்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவச் சிக்கல்களும் பின்னர் ஏற்பட்ட ஊழியர் அமைதியின்மையும் காரணமாக வியாபார நடவடிக்கைகள் ஸ்தம்பிதமாகி நிறுவகம் 1997 வரையான இரு ஆண்டு காலமாக மூடிவைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஊழியர்களின் கருத்துத் தெரிவிக்கப்பட்டமையால் 1996 இன் 29 ஆம் இலக்க அரச முயற்சிகள் புனரமைப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1997 இல் மீள ஒரு முறை அரசுடமையாக்கப்பட்டு ''வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி'' எனும் பெயரில் 2011 வரை திறன்வாய்ந்த அதிகாரியின் கீழ் முகாமைத்துவமும் நிர்வாகமும் கொண்டுவரப்பட்டன. இக் கணக்கீட்டுக் காலப்பகுதி (அதாவது 2011.04.01 – 2012.03.31) இற்கு இடைப்பட்ட 2011 யூன் 10 ஆம் திகதி முதல் பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட இருந்ததுடன் தற்போது இக் கம்பனி 2007 இன் 7 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் இரசாயன உர வகைகளை நிறுவகங்களுக்கிடையே பகிர்வதற்காக மீளப் பதிவுசெய்யப்பட்டது.

''மஹிந்த சிந்தனை'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையில் நெல் பயிரிடும் தேவைப்பாட்டில் 35% இற்கு மானிய உரங்கள் பகிரப்படுவதில் ஈடுபட்டிருந்த எமது கம்பனி உரிய கணக்கீட்டுக் காலப்பகுதியின் போது எய்தப்பட்ட மேலும் ஓர் இலக்காக 2011.06.21 ஆம் திகதி முதல் ஏனைய பயிர்களைப் பயிரிடுவதற்காகவும் உர மானியப் பகிர்வு ஆரம்பமானதைக் குறிப்பிடலாம். இதற்காக தேசிய உரச் செயலகத்தின் அனுசரணையும் ஆலோசனையும் பெறப்பட்டதுடன் எமது மத்திய களஞ்சியத் தொகுதியூடாகவும் 17 பிராந்திய களஞ்சியங்களினூடாகவும் உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் உரிய ஆண்டின் போது 148000 உர மெ.தொன்கள் விநியோகிக்கப் பட்டன. வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக ரூபா 161 மில்லியன் உழைப்பதற்கு ஏதுவான வகையில் ரூபா 982 மில்லியன் புரள்வு அறிக்கையிடப்பட்டது. வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனிக்கு உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ரூபா 100 மில்லியன் வருமான வரியைச் செலுத்த முடிந்தது. இவ்வாறே பங்கிலாபமாக ரூபா 10 மில்லியன் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தமையைத் தெரிவிப்பதில் நான் பெருமிதமடைகின்றேன்.

2011 தேசத்திற்கு மகுடத்திற்கு இணையாக ரூபா 13 மில்லியன் செலவில் அனுராதபுர மாவட்டத்தின் மிஹிந்தலை சிப்பிக்குளத்தில் முழுமையான ஓர் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு எம்மால் முடிந்தது. இக் காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்ட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ரூபா 6 மில்லியன் செலவில் பிரதான களஞ்சியத் தொகுதியில் லொறி நிறுத்துமிட புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான கேள்வி வழங்கலும் ரூபா 44 மில்லியன் செலவில் மூன்று மாடிகளைக் கொண்ட தலைமைக் காரியாலயத்திற்கான கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதற்கான கேள்விக் கோரலைக் குறிப்பிட முடிவதுடன் இச் செய்தியை எழுதுகையில் இந் நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தியடையும் நிலையில் நிலவுவதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ் இலக்கை எய்துவதற்கான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கிய பணிப்பாளர் சபைக்கும், சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும், நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும், எழுதுவினைஞர்கள் மற்றும் உரிய தரத்திலான பதவியணியினருக்கும் ஏனைய பணியாளர்கள் உட்பட அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக தேசிய உரங்கள் செயலகப் பணிப்பாளரினாலும் அவரது உத்தியோகத்தர்களாலும் இறக்குமதி திட்டமிடல் மற்றும் அனைவருக்கும் விநியோகிப்பதற்காக தொடர்ந்து வழங்கப்பட்ட ஆலோசனைகளும் காண்பிக்கப்பட்ட அனுசரணைக்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறித்த தினத்தில் இறக்குமதிக் கடன் பத்திரத்தைத் தீர்ப்பதற்காக உதவிய திறைசேரியின் செயற்பாட்டுப் பணிப்பாளருக்கும் அவரது உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந் நிதிய மற்றும் நிதி முன்னேற்றத்திற்காகப் பங்களித்த இக் கம்பனியின் உரித்தாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை விவசாயிகளினதும் இதன் மூலம் சகல இலங்கை வாழ் மக்களின் அபிவிருத்திக்காக எமது கடமைகளை மேற்கொள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கி, பெறுமதியான வளிகாட்டல்களை வழங்கிய விவசாய மற்றும் வனவிலங்குகள் அமைச்சின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் விவசாய மற்றும் வனவிலங்குகள் அமைச்சின் சகல உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

என்.எஸ்.எம். சம்சுதீன் (சட்டத்தரணி)
தலைவர்

ஏஎப்/ஏ/சீசீஎப்/எப்ஏ/2011/12 2013 மார்ச் 06

தலைவர்

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

**வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனியின் 2012 மார்ச் 31 இல் இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கம்பனியின் ஆண்ட அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2.5 (அ) ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2.5 (அ) ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

கம்பனியின் அறவிடமுடியாக் கடன் கொள்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடனுக்காக 2.5% ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 36,428,942 தொகை அல்லது ஆரம்பக் கடன் மீதியின் 63.7% ஆன 05

ஆண்டுகள் கடந்த கடன்பட்டோர் மீதிக்காக போதியளவில் அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாகும்.

(அ) இருப்பு இறக்குமதி செய்யப்பட்ட நாளில் நிலவிய நாணய மாற்று விகிதத்தைப் பார்க்கிலும் வேறுபட்ட விகிதத்தில் இறுதி இருப்பு மதிப்பிடப்பட்டிருந்தமையால் இருப்புப் பெறுமதி ரூபா 10,173,988 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இறுதி இருப்பின் அடிப்படையிலான நிவாரணம் ரூபா 517,005,334 ஆல் அதிகமாகக் காண்பிக்கப்படுவதனை சீராக்குகையில் உர மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக நாணயமாற்று நட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக உரிய கணக்குகள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது இறக்குமதி பட்டியல்களைத் தீர்க்கப்படுகையில் உர இறக்குமதிக் கணக்கில் இறக்குமதி செய்யப்பட்ட உரப் பெறுமதிக்குப் பதிலாக இறக்குமதிப் பட்டியல்கள் தீர்க்கப்பட்ட நாட்களின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நாணயமாற்று விகிதம் மாற்றமடைந்ததன் அடிப்படையில் ஏற்பட்ட ரூபா 154,840,852 தொகையான நாணயமாற்று நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2007 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 7,269,820 பெறுமதியான உர இருப்பு மீளாய்வாண்டின் உரக் கொள்வனவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 மே முதல் 2012 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் நீண்டகாலக் கடனுக்காக வங்கியால் அறவிடப்பட்ட வட்டி மற்றும் தண்டப் பணத்தைப் பார்க்கிலும் ரூபா 1,237,639 தொகை மேலதிகமாக திறைசேரியினால்

மீளளிக்கப்பட்டிருந்ததுடன் இத் தொகை வருமானமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளுக்கும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களுக்கும் இடையே இணக்கமற்ற 28 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இதில் 23 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 14,611,538 தொகையான கடன் மீதி, கடன்பட்டோரின் புத்தகங்களின் படி பூச்சிய மீதிகளென அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அக் கடன் மீதிகளின் சரியான தன்மை குறித்து கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

**2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) 2012 மார்ச் 31 இல் உள்ளவாறு 150 கடன்பட்டோர் தொடர்பான நிலுவைக் கடன் மீதி ரூபா 45,877,587 தொகையானதுடன் அதில் உள்ளடக்கப்பட்ட 1994 இற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 23,803,076 தொகையான மீதியை அறவிடுதல் அல்லது பதிவழித்தல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1997 ஆம் ஆண்டில் உரக் கம்பனி மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உருவான 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 74 கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 12,625,866 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 5,833,063 தொகையான 06 கடன்பட்டோர் தொடர்பாக மாத்திரம் கடன் அறவிடப்படும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ஊழியர் கடன் மீதியில் 18 ஆண்டுகளைப் பார்க்கிலும் பழைமையான சேவையை விட்டுச் சென்ற, சேவையை வறிதாக்கிய மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் ரூபா 3,546,999 ஆகக் காணப்பட்டன.

### 2.2.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | உர இருப்பு | 3,282,865,947 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | காணிகள் | 90,000,000 | உறுதி அல்லது சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான வேறு ஆவணங்கள் |

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அரச முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இன்றி 15 ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.5 ஆம் பந்தி மற்றும் 2011 செப்தெம்பர் 15 | - உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகைமையற்ற வேலைகள் முகாமை யாளருக்கும் போக்குவரத்து முகாமை யாளருக்கும் தனிப்பட்ட வாகனத்தை |

| | | |
|---|---|---|
| | ஆம் திகதிய 58(2) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ கடமை களுக்காகப் பயன்படுத்தியமைக்காக ரூபா 35,000 தொகையான மாதாந்த படிகள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>- அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் இடையே யான போக்குவரத்திற்காக உத்தியோக பூர்வ போக்குவரத்து வசதிகளுக்குத் தகமையற்ற 06 உத்தியோகத்தர்களுக்கும் அலுவலகத்தில் இருந்து வீடு வரை செல்வதற்கும் வருவதற்கும் வசதிகள் வழங்கப்பட்டிருந்த துடன் அவ் வாகனங்கள் உரிய உத்தியோகத்த ராலேயே ஓட்டிச் செல்லப்படுவதும் அவதானிக்கப்பட்டது. |
| (iii) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பந்தி | திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி திட்டம் இன்றி ஊக்குவிப்பு படியாக 2011/12 ஆம் ஆண்டின் போது ரூபா 8,178,899 செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/9 ஆம் இலக்க அரச நிதி திணைக்களம் மற்றும் 2000 மே 02 ஆம் திகதிய பீடீ/பீஈ/3/2000 ஆம் இலக்க அரசாங்க பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கை | அரசாங்க கம்பனிகளின் நிதிகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு முன்னர் உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரம் இன்றி அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்களில் ரூபா 464,694,252 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2009 ஒக்டோபர் 30 ஆம் திகதிய 4/5/1 ஆம் இலக்க தேசிய உரங்கள் செயலக சுற்றறிக்கை | மானிய உரங்கள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்படலாகாத போதிலும் இதற்கு முரணாக 2011 நவம்பர் 24 ஆம் திகதி ரூபா 282,960 தொகையான தேங்காய் உரங்கள் ஒரு நபருக்கு கடனுக்கு வழங்கப்பட்டிருந்தது. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாடுகள் ரூபா 264,859,852 தொகையான வரிக்கு முந்திய தேறிய இலாபத்தினை விளைவித்திருந்ததற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 326,513,860 ஆனமையால் நிதிசார் விளைவில் ரூபா 61,654,008 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

கம்பனியின் விற்பனை மற்றும் ஏனைய வருமானங்கள் 13% ஆல் வீழ்ச்சியடைந்தமை நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) கம்பனியினால் பேணப்படுகின்ற பிராந்தியக் களஞ்சியங்களின் எண்ணிக்கை 16 ஆனதுடன் 11 களஞ்சியங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களுடன் எழுத்து மூல உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011/12 ஆம் ஆண்டிற்கான களஞ்சிய காப்புறுதிக்காக ரூபா 1,302,266 தொகையான காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காப்புறுதிக் கம்பனியால் சுட்டிக் காட்டப்பட்டிருந்த களஞ்சியங்களில் நிலவும் குறைபாடுகள் திருத்தப்பட்டிராமையால் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 455,621 தொகையான இருப்பு நட்டம் தொடர்பாக காப்புறுதி இழப்பீட்டினை அறவிட முடியாதிருந்தது.

(இ) 2009/10 ஆம் ஆண்டின் வருமானங்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையை சீராக்குதலின் அடிப்படையில் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய ரூபா 262,257,930 தொகையான வரித் தொகைக்காக

புதிய வருமான வரி மதிப்பீடு நாளதுவரையாக்கப்பட்டு அத் தொகை உள்நாட்டு இறை வரித்திணைக்களத்திற்கு செலுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாய அமைச்சின் உரித்தான 4 வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக உரக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ் வாகனம் முறையாகக் கையளிக்கப்பட்டிராமையால் நிறுவனத்தின் சொத்துக்களாக இனங்காணப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

கம்பனியிடம் மானிய உர இறக்குமதியின் போதும் இருப்புகள் பேணலின் போதும் முறையான திட்டம் ஒன்று இல்லாதிருந்ததுடன் ஒவ்வொரு போகத்தின் போதும் உரத் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆகக் குறைந்த இருப்பு மட்டம், ஆகக் கூடிய இருப்பு மட்டம் மற்றும் மீள் கட்டளை மட்டத்தைத் தீர்மானிக்காது உர இறக்குமதி மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஒவ்வொரு போக இறுதியிலும் பிரதான உர களஞ்சியங்களில் மிகையான உர இருப்பு காணப்பட்டது. எடுத்துக்காட்டாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது ஒவ்வொரு போகத்தின் இறுதியிலும் பிரதான களஞ்சியங்களில் நிலவிய இருப்பு அடுத்துவரும் போகத் தேவைப்பாட்டில் அண்ணளவாக யூரியா 37% உம், எம்.ஓ.பீ. 78% ரீஎஸ்பீ 46% ஆக அவதானிக்கப்பட்டது.

## 4.3 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

ஒரு நாளுக்கு 480 மெட்ரிக் தொன் கொள்ளளவான உரத்தைக் கலந்து உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ரூபா 3,750,000 பெறுமதியான 3 உரக் கலவை இயந்திரங்கள் களஞ்சியக் கட்டிடத்தொகுதியில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் பின்னர் இந்த 3 இயந்திரங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 பந்திக்கு முரணாக கம்பனியின் பதவியணிக்காகச் சேர்க்கப்பட்டிருந்த 03 அங்கத்தவர்கள் வரிசை அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் கூலியாக ரூபா 757,862 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011/2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 5 மாதங்கள் 20 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் 2012 நவம்பர் 21 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(அ) உர இருப்புக் கட்டுப்பாடும் பகிர்வும்

(ஆ) வாகன நிர்வாகம்

(இ) கடன்பட்டோரின் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

# வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

## 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான இறுதிக் கணக்குகள்

## 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்பு | 2011/12 | 2010/11 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| 2007 மார்ச் 31 இலான மீள் மதிப்பீடும் சேர்ப்பனவுகளும் | 1 | 208,807,360 | 209,886,592 |
| மூலதன நடைமுறை வேலை | | 12,153,192 | 413,001 |
| | | **220,960,551** | **210,299,594** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 2 | 3,618,217,941 | 2,724,807,244 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 3 | 57,192,064 | 60,939,307 |
| பதவியணியினர் கடன்களும் முற்பணங்களும் | | 18,908,765 | 4,480,676 |
| ஏனைய கடன்பட்டோர் | 4 | 9,623,253,668 | 12,952,130,700 |
| பெறவேண்டிய வரி | | 2,394,734 | 2,675,239 |
| வைப்பு | | 452,109 | 407,109 |
| நிலையான வைப்புகள் | 5 | 677,694,252 | 801,672,463 |
| வங்கியில் உள்ள காசு | 6 | 83,093,770 | 150,797,182 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **14,081,207,302** | **16,697,909,919** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **4,302,167,853** | **16,908,209,512** |
| **மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| மூலதனம்- (ஒவ்வொன்றும் ரூபா 10 பெறுமதியான 10,000,000 பங்குகள்) | | 100,000,000 | 100,000,000 |
| மூலதன ஒதுக்கம் | | 1,683,685 | 1,683,685 |
| வருமான ஒதுக்கம் | | 30,691,298 | 30,691,298 |
| மீள் நிர்மாண மற்றும் மீள் பெறுமதியிடல் ஒதுக்கம் | | 290,172,577 | 290,172,577 |
| பகிராத உழைப்புக்கள் | | 922,772,774 | 768,443,422 |
| **மொத்த மூலதனம்** | | **1,345,320,333** | **1,190,990,981** |

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகாலக் கடன்கள் | | - | 4,668,437,069 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகாலக் கடன்கள் | | 3,586,937,069 | 3,244,500,000 |
| ஏற்பாடுகள் | 7 | 3,481,592,566 | 2,543,546,413 |
| சட்டபூர்வ மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 8 | 1,958,922 | 3,879,127 |
| மீளளிக்கத்தக்க வைப்பு | | 9,750,956 | 5,891,050 |
| வாடிக்கையாளர் வைப்புகள் மற்றும் பெற்ற மிகைகள் | | 10,634,395 | 17,685,271 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 9 | 5,553,231,195 | 4,826,474,019 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 290,908,448 | 384,560,006 |
| அட்டுறு செலவினங்கள் | | 21,833,969 | 22,245,577 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **12,956,847,520** | **11,048,781,462** |
| **மொத்த மூலதனமும் பொறுப்புக்களும்** | | **14,302,167,853** | **16,908,209,512** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகின்றேன்.

எச்.என். ஆரியதாச
**நிதி முகாமையாளர்**

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும். பணிப்பாளர்களுக்காகவும் அவர்கள் சார்பாகவும் கையொப்பமிட்டவர்கள்.

| | |
|---|---|
| ........................ | .................................. |
| என்.எஸ்.எம். சம்சுதீன் | ஜே.பீ. பிறியங்கனி லியனகே |
| தலைவர் | பணிப்பாளர் |

29 முதல் 44 வரையான பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

## 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான இறுதிக் கணக்குகள்

### வருமானக் கூற்று

| | குறிப்பு | 2011/12 | 2010/11 (திருத்தப்பட்டது) |
|---|---|---|---|
| **வருமானம்** | 10 | 982,118,071 | 1,070,227,931 |
| விற்பனைக் கிரயம் | 11 | (655,542,628) | (760,931,218) |
| **மொத்த இலாபம்** | | **326,575,442** | **309,296,714** |
| ஏனைய வருமானம் | 12 | 89,726,189 | 164,561,950 |
| | | **416,301,631** | **473,858,663** |
| விநியோகக் கிரயம் | 13 | (36,387,233) | (17,118,229) |
| நிர்வாகச் செலவினங்கள் | 14 | (73,359,044) | (60,127,424) |
| ஏனைய செலவினங்கள் | 15 | (1,937,512) | (2,489,898) |
| நிதிக் கிரயம் | 16 | (39,757,989) | (67,609,253) |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | | **264,859,852** | **326,513,860** |
| வருமான வரி | | (104,076,773) | (115,883,449) |
| **வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்** | | **160,783,079** | **210,630,411** |

29 முதல் 44 வரையான பக்கங்களில காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

### 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான இறுதிக் கணக்குகள்

### 2012 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மூலதன மாற்றக் கூற்று

| | பங்கு மூலதனம் ரூபா | மூலதன ஒதுக்கம் ரூபா | வருமான ஒதுக்கம் ரூபா | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா | பகிரப்படாத வருமானம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 2010.03.31 இல் உள்ளவாறான மீதி | 100,000,000 | 1,683,685 | 30,691,298 | 290,172,577 | 566,497,639 | 989,045,198 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | - | - | - | (8,684,628) | (8,684,628) |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | - | - | - | - | 210,630,411 | 210,630,411 |
| பங்கிலாபம் | - | - | - | - | - | - |
| 2011.03.31 இல் உள்ளவாறான மீதி | 100,000,000 | 1,683,685 | 30,691,298 | 290,172,577 | 768,443,422 | 1,190,990,981 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | - | - | - | 3,546,273 | 3,546,273 |
| காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | - | - | - | - | 160,783,079 | 160,783,079 |
| பங்கிலாபம் | | | | | (10,000,000) | (10,000,000) |
| 2012.03.31 இல் உள்ளவாறான மீதி | **100,000,000** | **1,683,685** | **30,691,298** | **290,172,577** | **922,772,774** | **1,345,320,333** |

29 முதல் 44 வரையான பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

# வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

## 2012 மார்ச் 31 இல் உள்ளவாறான இறுதிக் கணக்குகள்

### 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று

| | 2011/12<br>ரூபா | 2010/11<br>ரூபா |
|---|---:|---:|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/நட்டம் | 264,859,852 | 326,513,860 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் | (3,546,273) | 8,684,628 |
| | **261,313,579** | **335,198,488** |
| **சீராக்கங்கள் :** | | |
| பெறுமானத் தேய்வு | 11,981,743 | 12,800,031 |
| ஏற்பாடு : - பணிக்கொடை | 2,716,892 | 2,697,585 |
| : - அறவிடமுடியாக் கடன் | 179,024 | 858,581 |
| இறுதி இருப்பிலான மானியம் | 3,453,267,229 | 2,528,049,308 |
| வட்டி வருமானம் | (59,820,500) | (43,239,738) |
| செலுத்தப்பட்ட வட்டி | 38,372,930 | 2,303,372 |
| பரிமாற்று இலாபம் | - | (101,404,038) |
| பரிமாற்று நட்டம் | 192,697,280 | - |
| இருப்பு நட்டம் | - | 2,090,570 |
| முன்னைய ஆண்டின் இறுதி இருப்பின் மானிய அகற்றல் | (2,528,049,308) | (1,895,207,384) |
| **செயற்பாட்டு இலாபத்திற்கு முன்னரான தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | **1,372,658,869** | **844,146,774** |
| வைப்புகளிலான குறைவு/ அதிகரிப்பு | - | - |
| பதிவுப் பொருட்களிலான குறைவு/ அதிகரிப்பு | (893,410,697) | (652,244,685) |
| வியாபாரக் கடன்பட்டோரிலான குறைவு/அதிகரிப்பு | 3,747,243 | 1,430,642 |
| ஏனைய கடன்பட்டோரிலான குறைவு/அதிகரிப்பு | 3,328,877,032 | 1,995,799,951 |
| பதவியணியினர் கடனிலான குறைவு/அதிகரிப்பு | (14,428,089) | 331,025 |
| நடைமுறைப் பொறுப்புகளிலான குறைவு/ அதிகரிப்பு | (402,706,793) | 1,511,487,293 |
| பெற வேண்டிய நடைமுறை வரியிலான குறைவு/அதிகரிப்பு | 280,505 | 5,731,428 |
| குறுங்காலக் கடன் அதிகரிப்பு | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசு** | **3,395,018,070** | **3,706,682,429** |

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (67,685) | | (835,166) |
| செலுத்தப்பட்ட வட்டி | (38,372,930) | | (53,259,774) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசு** | | **3,356,577,455** | **3,652,587,489** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| பெற்ற வட்டி | 59,820,500 | | 43,239,738 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (11,142,510) | | (28,029,798) |
| நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருமானம் | | | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | **48,677,990** | **15,209,940** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| நீண்ட காலக் கடன் அதிகரிப்பு | (3,586,937,069) | | (3,244,500,000) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (10,000,000) | | - |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | **(3,596,937,069)** | (3,244,500,000) |
| மானியத்தில் திரண்ட வழு | | | 104,211,968 |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு | | **(191,681,623)** | **527,509,396** |
| காலப் பகுதியின் ஆரம்பத்தில் காசும் காசிற்குச் சமமானவையும் | | 952,469,645 | 424,960,249 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசும் காசிற்குச் சமமானவையும்** | | **760,788,022** | **952,469,645** |

29 முதல் 44 வரையான பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

## வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. கூட்டமைப்புத் தகவல்

#### 1.1 நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பு

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரங்கள் கம்பனி ஓர் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாகும். இக்கம்பனி இலங்கையில் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் வத்தளை ஹுனுப்பிட்டியில் அமைந்துள்ளது.

#### 1.2 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

